**07.10.2025**

அ.வ.எண். **46/2021**

<u>வா.சா.**2** மனோகரன்  குறுக்கு விசாரணை</u>

**1**. வாதி எனக்கு உறவினர் ஆவார். எனது ஊர்காரர். வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பிரதிவாதிகள் வாதியின் சொத்தில் பயிர் வைக்க கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி எங்கு வசித்து வருகிறார் என்றால் சென்னையில் வசித்து வருகிறார். எவ்வளவு காலமாக அங்கு இருக்கிறார் என்றால் **50** வருடத்திற்கு மேலாக சென்னையில் தான் உள்ளார். வாதி எனக்கு குத்தகை பத்திரம் அல்லது உடன்படிக்கை எழுதி கொடுத்துள்ளாரா என்றால் அப்படி ஆவணம் எதுவும் எழுதி தரவில்லை ஆனால் நான்தான் சொத்தை பாதுகாத்து வருகிறேன்.

**2**. கன்னிதாச நாயுடுக்கு குப்பம்மாள் என்ன உறவுமுறை என்றால் அத்தை உறவு ஆவார். ஏற்கனவே அவர்களுக்கு இடையில் பாகபிரிவினை வழக்கு நடந்ததா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் அனைத்து சர்வே எண்கள் தெரியாது மொத்ததில் சுமார் **7** சர்வே எண்கள் இருக்கும். மொத்தம் எவ்வளவு செண்டிற்கு இந்த வழக்கு நடக்கிறது என்றால் **3** ஏக்கர் சொத்து ஆகும். கிணறு**,** பம்பு செட்  மற்றும் மின்சார இணைப்பு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.**20/1**ல் உள்ளது. எனக்கு தாவாசொத்தில் தனிபட்ட உரிமை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

**3.** பிரதிவாதிகளின் தாயார் குப்பாபாய் அம்மாள் வாதி மற்றும் அவரது அப்பா பெயரில் இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. **2021**ம் வருடத்திலிருந்து தான் தாவாசொத்தை நான் பார்த்து வருகிறேன்.

( குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)